REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா-விகிதம்
[ஏப்ரல் முதல் தேதியிலிருந்து]
★
மூன்று மாதம் ... ... ரூ. 6
ஆறு மாதம் ... ... ரூ. 12
ஒரு வருடம் ... ... ரூ. 24
தனி இதழ் 7 நயா பைசா
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: பங்குனி 14உ புதன் (27—3—57) ★ ★ வெளியூர்: பங்குனி 15உ வியாழன் (28—3—57) [இதழ் 247

ஒரே நாளில் ரூ. 75 இலட்சம் இலாபம்!

நிறுவனங்கள் சம்பாதிப்பது சகஜமாம்

கிருஷ்ணமாச்சாரி கிலேசமின்றி கூறுகிறார்

துணை வரவு-செலவுத் திட்டங்கள் முன்கூட்டியே வெளியானதா என்பதுபற்றி மக்கள் சபையில் விவாதம்

கடந்த நவம்பர் 30-ந்தேதியன்று, தான் மக்கள் சபையில் தாக்கல் செய்த துணை வரவு-செலவுத் திட்டம் முன்கூட்டியே வெளியாகிவிட்டது என்று இப்போது மக்கள் சபையில் எழுந்த புகாரினை, நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி மறுத்துரைத்திருக்கிறார்.

குற்றச்சாட்டினை எழுப்பியவர்கள், அந்த நவம்பர் 30-ந்தேதியன்று இந்தியாவெங்கணும் பங்கு மார்க்கெட்டுகளில் அசாதாரணமான 'சுறுசுறுப்பு' காணப்பட்டதாகக் கூறினர்.

அதற்குப் பதிலளித்த மந்திரி கிருஷ்ணமாச்சாரி, 'அவர்கள் நடத்துகிற வியாபாரத்தின் தன்மையை நோக்கினால், ஒரே நாளில் ரூ. 73 இலட்சம் சம்பாதிப்பது என்பது ஒன்றும் அசாதாரணமானது அல்ல—சகஜமானதுதான்,' என்று கூறினாராம்!

மேலும் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பேசும்போது, குறிப்பிட்டார்—'1956 டிசம்பர் 6-ந் தேதியிட்ட 'காபிடல்' என்ற இதழில், பட்ஜெட் விஷயங்கள் முன்கூட்டியே வெளியானதாக செய்தி வந்தது. சில மக்கள் சபை உறுப்பினர்களும், 'டாடா, மற்றும் இந்திய இரும்பு பங்குகள், நவம்பர் 30-ந்தேதியன்று ஏராளமான அளவு விற்பனையாயின' என்றும், 'இதற்கு வரி விதிப்புத் திட்டங்கள் முன்கூட்டியே வெளிவந்ததுதான் காரணம்' என்றும் புகார் செய்தனர்.

"இதுகுறித்து விவரித்தபோது, இந்த அதிகமான விற்பனைக்குக் காரணம், அன்று பகல் 1-30 மணிக்கு வரவு-செலவுத் திட்ட விவரங்கள் கிடைத்ததும், அந்த மார்க்கெட்டில் ஏற்பட்ட பரபரப்புதான் என்றும் தெரிய வந்தது.

ஒரே நாளில் ரூ. 73 இலட்சம்

'முன்கூட்டியே வரவு-செலவுத் திட்ட விவரங்கள் வெளியாகாமலிருந்தால், ஒரே நாளில் ஒரு நிறுவனம் ரூ. 73 இலட்சம் சம்பாதிக்க முடியுமா!' என்று, தோழர் எச். வி. காமத் துணைக் கேள்வி ஒன்று எழுப்பினார்.

வேலைநிறுத்தம் முடிவடையும் என்ற நம்பிக்கை சீர்குலைந்துவிட்டது

பேச்சுவார்த்தை பலனளிக்கவில்லை

பல இலட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ள வேலைநிறுத்தத்தின் எதிரொலி?

இலண்டன், மார்ச் 20—

பிரிட்டனில் ஏற்பட்டுள்ள 3 இலட்சம் கப்பல் தளத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் முடிவடையக்கூடும் என்ற நம்பிக்கை சீர்குலைந்து விட்டதாம்.

5 சதவிகிதம் சம்பள உயர்வு தர முதலாளிகள் சம்மதித்ததை, தொழிற் சங்கத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனராம்!

6 மணி நேர விவாதத்திற்குப் பிறகு பேச்சு வார்த்தையில் முட்டுக்கட்டை போட்டது போன்ற நிலைமை உண்டாகிவிட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது.

இருதரப்பிலும் சமரசம் ஏற்பட்டால் 10 இலட்சம் எஞ்சினீயரிங் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்திருப்பதும் முடிவடையுமே என்று எதிர் பார்த்தது நாட்டில் பெரும் ஏமாற்றத்தை விளைவித்திருப்பதாக தெரிகிறது.

இவ்விரண்டு வேலை நிறுத்தங்களுக்கும் அடிப்படையான கோரிக்கை என்னவெனில், சம்பளத்தில் 10 சதவிகிதம் உயர்வு வேண்டும் என்பதுதான்.

ஒரிசாவில் கணதந்திர பரிஷத் மந்திரி சபை அமைக்கும்?

கம்யூனிஸ்டுகளும் ஆதரவு நல்குவர்!

கட்டாக், மார்ச் 26—

ஒரிசாவில் தன்னால் ஒரு நிலையான சர்க்கார் நிறுவ முடியும் என்றும், தனது சர்க்காருக்கு 73 உறுப்பினர்களின் ஆதரவு இருக்கிறது என்றும் பாட்னா மகாராஜாவும், கணதந்திரபரிஷத் சட்ட சபைக் கட்சியின் தலைவருமான ஆர். என். சிங்கதேவ் கவர்னருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கூறியிருக்கிறாராம்.

கணதந்திர பரிஷத் டிக்கெட்டில் வெற்றி பெற்றவர்கள் 51 பேர் இருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

'மேலும், காங்கிரசல்லாத மந்திரி சபை அமைப்பதற்குத் தாங்கள் ஒத்துழைப்புத் தருவதாக உத்கல் பி. சோ. கட்சி முடிவு கூறியுள்ளதுடன், நாங்கள் அமைக்கும் மந்திரி சபைக்கு ஆதரவு தருவதாகவும் தெரிவித்துள்ளனர்; பி. சோ.-க்களின் எண்ணிக்கை 11 ஆகும்,' என்றும் அவர் கவர்னருக்கு எழுதியிருக்கிறாராம்.

கம்யூனிஸ்டு ஆதரவு

'பி. சோ.-க்கள் மட்டுமின்றி காங்கிரசல்லாத மந்திரி சபை அமைப்பதற்குத் தாங்களும் சம்மதிப்பதாகவும் ஆதரவு தருவதாகவும் கம்யூனிஸ்டுகளும் என்னிடம் தெரிவித்துள்ளனர்; இத்துடன், இரண்டு சுயேச்சைகளும் ஆதரவு தருவதாகக் கூறியிருக்கின்றனர்,' என்றும் அந்த பாட்னா மகாராஜா பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கின்றார்.

சூயஸ் சூழ்நிலை மாறிவிட்டது?

இஸ்மாலியா, மார்ச் 25—

இன்று முதல் சூயஸ் கால்வாயில் 4,000 டன் எடையுள்ள கப்பல்களும் அனுமதிக்கப்படுமாம்.

இதுவரையில் 2,000 டன் எடையுள்ள கப்பல்களே அனுமதிக்கபபட்டுவந்தனவாம்.

காசா பகுதியில் நெருக்கடி ஏற்படும்?

கெய்ரோ, மார்ச் 24—

காசா பகுதியில் மீண்டும் இஸ்ரேலுக்குச் சொந்தமான படைகள் குவிக்கப்பட்டு வருவதாகவும், வடபகுதியில் கூடாரங்களும், கொடிகளும் கண்ணுக்குத் தெரிவதாகவும் ஐ. நா. செய்திப் பிரிவுகள் தெரிவித்துள்ளன.

'அழைப்பை ஏற்பதற்கு இல்லை'

மாநில பி.சோ.கட்சி முடிவு

"கேரளத்தில் அமையவிருக்கும் கம்யூனிஸ்டு மந்திரி சபையில், இடம்பெற வருமாறு 'பொலிட் பீரோ' விடுத்த வேண்டுகோளினை ஏற்பதற்கில்லை,"

என்று, மாநில பி. சோ. கட்சியின் நிர்வாகக் குழு, மற்றும் பார்லிமெண்டரி பிரிவு கூட்டுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கேரளத்தில் கம்யூனிஸ்டு மந்திரி சபை

பி. சோ.-வின் ஆதரவுக்காகக் காத்திராது!

அஜாய் கோஷ் விளக்கம்

எர்ணாகுளம், மார்ச் 26—

பி. சோ. கட்சியினரின் ஆதரவை எதிர்பார்த்துக்கொண்டிராமல் மந்திரிசபை அமைப்பது, மந்திரிகளின் பெயர்ப் பட்டியல் தயாரிப்பது முதலிய வேலைகளைக் கவனிக்குமாறு கேரள சட்ட சபை கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்று, அகில இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி செயலாளர் அஜாய் கோஷ் கூறியிருக்கிறார்.

"நாங்கள் தந்துள்ள அழைப்பை ஏற்பதோ, நிராகரிப்பதோ பி. சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழுவைப் பொறுத்தது,"

என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"பி. சோ. கட்சித் தலைவரிடமிருந்தோ, செயலாளரிடமிருந்தோ இன்னும் பதில் ஏதும் வரவில்லை. பதில் வருகிறதோ இல்லையோ, மந்திரி சபை அமைப்பிற்கான வேலைகளை நாங்கள் தொடர்ந்து கவனிக்கப்போகிறோம்,"

என்றும் அஜாய்கோஷ் கூறியிருக்கிறார்.

நாட்டில் ஒரு சிறு மாநிலத்தில் மட்டும் கம்யூனிஸ்டு மந்திரி சபை அமைவது, ஒரு மாநிலத்தில் மாவட்டக் கழகம் அல்லது ஊராட்சி மன்றத்தைக் கைப்பற்றுவதற்குச் சமமாகும்' என்று கருத்தறிவித்துள்ளார்.

மேலும், 'வரி விதிப்பை மக்கள் விரும்பவில்லை; ஆனால் வரிகளை உயர்த்தாமல் நல்லது செய்துவிட முடியாது,' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

★

சர்க்காரின் கொள்கை

"மாநில நிர்வாகம் பற்றி சர்க்காரின் கொள்கை என்ன என்பதை, மந்திரிசபை பொறுப்பேற்று, மாநில நிலைகளைப் பற்றிய சகல அம்சங்களையும் ஆராய்ந்த பின் நாங்கள் அறிவிப்போம்"

என்று, முதன் மந்திரி பதவி ஏற்கவிருக்கும் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட் தெரிவித்திருக்கிறார்.

★

காமராசர் கருத்தில் கேரளக் கம்யூனிஸ்டுகள்

சென்னை, மார்ச் 26—

கேரளாவில் கம்யூனிஸ்டு கட்சி பதவிப் பொறுப்பு ஏற்பதற்குக் காங்கிரஸ் காரியக் கமிட்டி சாதகமாக இருக்கிறதாம்.

திருச்சியில் நெசவாளர் போராட்டம்

கூலிகுறைப்புக்கு எதிர்ப்பு

திருச்சி, மார்ச் 26—

உறையூரில் நெசவாளரின் கூலி குறைக்கப்பட்டுள்ளதால், 150 நெசவாளர்கள் 8 'மாஸ்டர் வீவர்கள்' முன்பு, சத்தியாக்கிரகம் செய்து வருகின்றனர். இந்தத் தகராறைத் தீர்ப்பதற்கு ரெவினியூ டிவிஷனல் அதிகாரி முன்னிலையில் சமரசப் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

தவறுதல் நடைபெற்ற இடங்களில் மறுவாக்குப் பதிவுக்கு உத்தரவாம்!

மக்கள்சபையில் அமைச்சர் தகவல்

புதுடில்லி, மார்ச் 26—

சமீபத்தில் நடைபெற்ற தேர்தலின்போது தவறுகள் ஏற்பட்ட இடங்களில் மறு வாக்குப் பதிவு நடத்த உத்திரவிடப்பட்டிருப்பதாக மத்திய சட்ட மந்திரி பிஸ்வாஸ் மக்கள்சபையில் அறிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அசாம், பீகார், பம்பாய், மத்தியப் பிரதேசம், ஒரிசா, உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 39 வழக்குகள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சென்ற தேர்தலின்போதும் தேர்தல் அதிகாரிகளால் தவறுதல்கள் ஏற்பட்டன; ஆனால், சமீபத்தில் ஏற்பட்ட தவறுகள் முன்பு ஏற்பட்டது போன்றதா என்பதை தம்மால் கூற இயலாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நம் நாடு

சென்னை 27—3—57 புதன்

கடனா? இனாமா?

மக்கள் பாடுபட்டுக் கொடுக்கும் வரிப் பணத்தை எந்தெந்த வகையில் இந்தியப் பேரரசின் அமைச்சர்கள் ஊதாரித்தனமாகச் செலவழித்துவருகிறார்கள் என்ற உண்மை, அடிக்கடி அரசாங்கத் தணிக்கைக் குழுவினால் வெளியிடப்பட்டுவரும் தகவல்களிலிருந்து வெளியாகி வருகின்றன. உண்மையை எடுத்துக்காட்டிக் கண்டிப்புடன், எதிர்காலத்தில் ஊதாரித்தனமாகச் செலவிடுவதைத் தவிர்ப்பதற்கான சிறந்த வழிவகைகளையும் அக்குழு தீட்டிக் காட்டியும் உள்ளன. இருந்தாலும், தணிக்கைக் குழுவின் கண்டனத்திற்கும் கருத்துரைக்கும் மதிப்பளிக்காமல், எப்பொழுதும்போன்றே உருப்படாத தொழில்களுக்கும், திரும்பப் பெற முடியாத நிறுவனங்களுக்கும் கடன் என்ற பெயரில் கொட்டியழுவதையே வழக்கமாகக் கையாண்டு வருகின்றனர் இந்தியப் பேரரசின் அமைச்சர்கள்.

மத்திய அமைச்சர்கள் எவ்வளவு பொறுப்பற்றத்தனமாக வரிப்பணத்தைப் பாழடித்து வருகின்றனர் என்ற உண்மையை அரசாங்கத் தணிக்கைக் குழு மட்டுமே கூறியுள்ளது என்பதில்லை. தாமோதர பள்ளத்தாக்கில் சீரழிக்கப்பட்டு வரும் வரிப்பணத்தைக் குறித்து தாம் பதவியைவிட்டு விலகுவதற்குச் சில நாட்களுக்கு முன்பு தான் காலஞ்சென்ற குமாரசாமி ராஜா அவர்கள் சுட்டிக்காட்டி இருந்தார்.

தணிக்கைக் குழுவும், காலஞ்சென்ற ராஜா போன்ற தனிநபர்களும் இடித்துக் கூறியுள்ளதைவிட, வரிப் பணத்தைப் பொறுப்பற்றத்தனமாகச் செலவிட்டுவரும் மத்திய அமைச்சர்களின் போக்கு குறித்து நிதி அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் மக்கள் சபையில் விளக்கமாக விளம்பியுள்ளார். வரிப் பணம் பாழாக்கப்படும் வகையைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ள அவர், அதற்குப் பொறுப்பாளியாக உள்ள அமைச்சரின் பெயரை வெளிப்படையாகக் கூறாமல் மூடி மறைத்திருக்கிறார்.

நிதி அமைச்சர்தான், பொறுப்பற்றத்தனமாக வரிப் பணத்தை வாரி வழங்கும் வள்ளற்றன்மை உடைய கூட்டு அமைச்சரின் பெயரைக் கூற விரும்பாதிருந்தாரென்றால், அப்பொழுது மக்கள் சபையில் வீற்றிருந்த மக்கள் பிரதிநிதிகளும், அக்கடமை தவறிய அமைச்சரின் பெயரைத் தெரிந்துகொள்ள விரும்பாது இருந்திருக்கின்றனர். உண்மையைத் தெரிந்து கொண்டு, மக்கள் வரிப் பணம் பாழாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமே என்ற தங்கள் கடமையைக் குறித்து எண்ணத் தவறியபோதிலும், பொறுப்பை மறந்து நடந்துகொள்ளும் ஊதாரி அமைச்சரை தெரிந்திருக்க வேண்டுமே என்ற, எவருக்கும் ஏற்படக்கூடிய சாதாரண ஆச்சரிய உணர்ச்சியாவது அம்மக்கள் சபை உறுப்பினர்களுக்கு ஏற்பட்டு இருக்க வேண்டும். சாமானியர்களுக்கும் கண்டிப்பாக ஏற்படக்கூடிய அச்சாதாரண ஆச்சரிய உணர்ச்சியும்கூட அப்பொழுது சபையிலிருந்த மக்கள் பிரதிநிதிகளுக்கு ஏற்படக் காணோம். ஆச்சரியங்கூட கொள்ள முடியாத இருதயம் படைத்த அவர்களுக்கு, மக்கள் வரிப்பணம் பாழாக்கப்படுவது கேட்டு பதைப்பும் ஆத்திரமும் எப்படி ஏற்பட முடியும்?

'பல நிறுவனங்களுக்குக் தரப்படும் கடன் தொகையைத் திரும்பப்பெற முடிவதே கிடையாது. எனவே, அவ்வாறு தரப்படும் தொகையைக் கடன் என்றழைப்பதைவிட இனாம் தொகை என்று அழைப்பதே பொருத்தமானதாகும்' என, நிதி அமைச்சர் பல தொழில் நிறுவனங்களுக்கு இந்தியப் பேரரசு தரும் கடன் பற்றிய உண்மையை ஒளிவுமறைவு இல்லாமல் விளக்கியுள்ளார். தாம் கூறிய உண்மைக்கு ஆதாரவாக ஒரு தொழில் நிறுவனம் பெற்றுள்ள கடன் விவரத்தையும் எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டுள்ளார்.

14 இலட்சம் மூலதன மதிப்புடைய நிறுவனம் ஒன்று இந்தியப் பேரரசிடமிருந்து ஏற்கனவே ரூ. 44·37 இலட்சத்தைக் கடனாகப் பெற்றுள்ளது.

அவ்வாறு அரசாங்கத்திடமிருந்து பெற்றுள்ள கடனில் 30 இலட்ச ரூபாயை, அந்த நிறுவனம் பாழாக்கிவிட்டிருக்கிறது.

அதே நிறுவனம் மீண்டும் ரூ. 20 இலட்சம் கடனாகவேண்டும் என்று இந்தியப் பேரரசைக் கோரி இருக்கிறது.

அக்கோரிக்கையைச் செயலாற்ற, இந்தியப் பேரரசின் அமைச்சர் துறை ஒன்று நிதி அமைச்சரை, அத்தொகையைத் தனது துறைக்கு ஒதுக்குமாறு வேண்டியிருக்கிறது.

அந்த நிறுவனத்தின் கடன் மனுவை ஆராய்ந்து பார்த்த நிதி அமைச்சர், அந்த நிறுவனம் பற்றிய மேற்படி உண்மைகளை மக்கள் சபையில் அறிவித்துள்ளார். அத்தொடர்பில் தான், 'பல நிறுவனங்களுக்கு இந்தியப் பேரரசு கொடுக்கும் கடன்கள் திரும்பப் பெறப்படுவதே கிடையாது. எனவே, அவ்வாறு தரப்படும் கடனைக் கடன் என்று அழைப்பதைவிட இனாம் என்று அழைப்பது பொருத்தமுடையதாகும்' என்று நிதி அமைச்சர் கூறியிருக்கின்றார். ரூ. 14 இலட்சம் மதிப்புடைய மூலதனம் கொண்டுள்ள நிறுவனத்துக்கு பெருந் தொகையான 44·37 இலட்சம் ரூபாயை எப்படி கடனாகத் தர, இந்தியப் பேரரசு முதன்முதலாக முன்வந்தது?

அவ்வாறு, பெருந் தொகையைக் கடனாகத் தரலாம் என சிபாரிசு செய்த அமைச்சர் துறை எது? அத்துறைக்குப் பொறுப்புடைய அமைச்சர் யார்?

ரூ. 20 இலட்சம் கடன் கேட்டபொழுது மட்டும், அந்த நிறுவனத்தின் மூலதனத்தைக் கண்டறிய முயன்ற நிதிஅமைச்சர், ரூ. 44 இலட்சத்தை அதே நிறுவனத்திற்குக் கடனாகக் கொடுக்க முன்வந்த பொழுது, அந்த நிறுவனத்தின் மூலதன மதிப்பை ஆராயாது இருந்தது ஏன்?

ஏற்கனவே பெருந்தொகையைக் கடனாகப் பெற்றுள்ளதைத் திருப்பிக் கொடுக்காத நிலையிலேயே, மீண்டும் அதே நிறுவனத்திற்கு மேலும் பெருந் தொகையைக் கடனாகக் கொடுக்கலாம் எனத் தீர்மானித்துச் செயலாற்ற முன்வந்த அமைச்சர்துறை எது? அதற்குரிய அமைச்சர் பெயர் என்ன?

அக்குறிப்பிட்ட அமைச்சருக்கும், கடன் பெற்றுள்ள தொழில் நிறுவனத்திற்கும்ஏதாவது தொழில்துறை தொடர்பு இருக்கிறதா? அல்லது இரத்தக் கலப்பு ஏதாவது உண்டா?

அந்த நிறுவனம் ஏற்கனவே பெற்றுள்ள 44·37 இலட்சம் ரூபாய் கடனைத் திரும்பப் பெற, நிதி அமைச்சரோ அல்லது கடன் சிபாரிசு செய்த அமைச்சர் துறையோ முயலாதது ஏன்?

இவ்வளவிற்கும் பிறகாவது, அந்த நிறுவனம் சேர வேண்டிய பெருந்தொகைக் கடனை வசூலிக்க, நிதி அமைச்சர் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளாரா?

இந்நிறுவனம் பெற்றுள்ள முதல் கடன் பற்றியும், பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்காத நிலையிலேயே மேலும் கடன் கேட்க முன்வந்திருப்பது பற்றியும், அதற்குக் கடன் கொடுக்க சிபாரிசு செய்துள்ள அமைச்சர் குறித்தும், அதை மறுத்துள்ள நிதி அமைச்சர் போக்கு குறித்தும், இருக்கக்கூடிய முழு விவரத்தையும் இந்தியப் பிரதமர் பண்டித நேரு அறிந்திருக்கின்றாரா? இல்லையா?

இவ்வளவும், இதற்கு மேலும் பல கேள்விகளைக் கேட்டிருக்க வேண்டும் மக்கள்சபையில் மக்கள்பிரதிநிதிகள் அப்பொழுது.

ஆனால், வாய் திறக்கவில்லை— வரிப் பணம் பாழாக்கப்படுகிறதே எனத் திடுக்கிடவில்லை —பொது ஒழுக்கம் சீரழிகிறதே எனப் பதைக்கவில்லை—அப்பொழுது சபையிலே வீற்றிருந்த மக்கள் பிரதிநிதிகள்!

மக்களின் வரிப் பணத்தைப் பாழாக்கிய அமைச்சரின் பெயரை வெளியிட வேண்டும் —கடன் பெற்ற நிறுவனத்தின் திருநாமத்தையும் தெரிவிக்க வேண்டும். அதுவுமன்றி, குறிப்பிட்ட அமைச்சருக்கும், கடன் பெற்றுள்ள நிறுவனத்திற்கும் உள்ள உறவு முறையையும் வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு செய்வதை விடுத்து, அரசாங்கம் கொடுத்துள்ள திரும்பப் பெறமுடியாத கடனை, கடன் என்று அழைப்பதா அல்லது இனாம் என்று அழைப்பதா என ஆராய்ந்து கொண்டிருப்பதால், நிலைமையை சீர்செய்வது ஒருக்காலும் முடியாது.

'கொள்கையளவில் காங்கிரசுக்கும் சீர்திருத்தக் கட்சிக்கும் வேறுபாடில்லை'

'எனவே அதனால் உண்மையான எதிர்க் கட்சியாக இயங்க முடியாது'

'தி. மு. கழகமே முதன்மையான எதிர்க்கட்சி ஆகத் தகுதிபடைத்தது'

"அமைச்சரவை அமைப்போடு கூடச் சட்ட சபையில் முதன்மையிடம் வகிக்கவேண்டிய எதிர்க் கட்சியைப் பற்றிய சிக்கலும் புதுடில்லியில் ஆலோசிக்கப்படலாம். உறுப்பினர் எண்ணிக்கையில் மிகச் சிறிய ஏற்றத்தாழ்வுள்ள இரண்டு எதிர்க் கட்சிகள் புதிய சட்டசபையில் தோற்றமளிக்கும். ஒன்று 16 உறுப்பினர்களுள்ள காங்கிரசுச் சீர்திருத்தக் கட்சி; மற்றொன்று, இவ்வெண்ணிக்கையில் ஒன்று குறைந்த திராவிட முன்னேற்றக் கட்சி. கொள்கையளவில், காங்கிரசுக்கட்சிக்கும், காங்கிரசுச் சீர்திருத்தக் கட்சிக்கும் எத்தகைய கருத்து வேறுபாடும் இல்லை; தனிப்பட்ட முறையிலிருந்த சில குறைகளே இப்பிரிவினைக்குக் காரணம். ஆகையால் உண்மையான எதிர்க் கட்சியாகப் பணியாற்றுவதற்கு இக்கட்சியினரால் இயலாது. அடுத்தபடியாக உள்ளது திராவிட முன்னேற்றக்கட்சி. இது கொள்கையளவிலும் செயல் முறையிலும், காங்கிரசின் நேரிடையான எதிர்க் கட்சியாகும். கட்சிச் சார்பற்ற தனிப்பட்ட உறுப்பினர்கள் சிலர் இதனுடன் சேரும் வாய்ப்பு ஏற்பட்டால், எண்ணிக்கையளவிலும் இது சட்ட சபையில் முதன்மையான எதிர்க் கட்சியாக இருப்பதற்குப் பெரிதும் தகுதி வாய்ந்தது. இக்கருத்தை வற்புறுத்தி, சென்னை சட்டசபையின் முன்னாள் செயலாளர் திரு. ஆர். வி. கிருஷ்ண அய்யர், ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

"காங்கிரசிற்கு அடுத்தபடியாக திராவிட முன்னேற்றக் கழகம் சென்னை மாகாணத்தில் வலிமை பொருந்திய அரசியல் கட்சியாக முன்வந்துள்ளதே, பொதுத் தேர்தல்களிலிருந்து ஏற்பட்டுள்ள முக்கியமான தோற்றமாகும்"—என்று அவர் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

"இந்தத் தேர்தல்களில், காங்கிரசிற்கு அடுத்த நிலையில், பெரும்பான்மையான தொகுதிகளுக்குத் தேர்வு நாடுவோர்களை நிறுத்தியது தி. மு. க.-தான். 117 தேர்வு நாடுவோர்களை நிறுத்தி, 15 உறுப்பினர்களை அடைந்த போதிலும், வாக்களிப்பின் விவரங்களைப் பார்த்தால், மற்ற எதிர்க் கட்சிகளைவிட மக்களிடம் அதிகமான செல்வாக்குப் பெற்றுள்ள கட்சி தி. மு. கழகம் என்றும், சென்னை மாகாணத்தில் தி. மு. க. பலம் வாய்ந்த கட்சி என்று திட்டவட்டமாகத் தெரிந்து விட்டதென்றும் திரு கிருஷ்ணய்யர் குறிப்பிட்டிருக்கிறார். மக்களாட்சி முறை ஒழுங்காக இயங்குவதற்குச் சிறந்த ஓர் எதிர்க் கட்சி உருவாகும் என்பது பல தலைவர்களுடைய கருத்து. அக்கருத்து சென்னை மாகாணத்தில் செயலாகிவிட்டது.

"தி. மு. க. பொறுப்பு வாய்ந்த அரசியல் எதிர்க் கட்சியாக விளங்குமென்பதில் ஐயமில்லை. ஆதியிலிருந்தே, மக்களாட்சி முறை அரசியலில் சென்னை சிறப்பான புகழ் பெற்றிருக்கிறது. புதிய சட்ட சபையில் இப்புகழ் பெரிதும் பாதுகாக்கப்படும் என்பது திண்ணம்.

—'தமிழ் நாடு'
25—3—57

செலவாகும் தொகை எவ்வளவு?

திட்டமாகக் கூறுவதற்கு இல்லை என்கிறார் செலவிடுபவர்

ஐதராபாத், மார்ச் 23—

"மதுவிலக்கு அமுல் நடத்துவதால் செலவாகிற தொகை எவ்வளவு என்பதை வரையறுத்துக் கூறுவதற்கில்லை," என்று, ஆந்திர அமைச்சர் கோபால ரெட்டி, கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

மேலும் அவர், மதுவிலக்குச் சட்டத்தில் சில குறைபாடுகள் இருப்பதற்காக அச்சட்டத்தையே நீக்க விரும்புவது தவறு என்றும், மதுவிலக்கு துரிதமாக வழக்கத்திற்குக் கொண்டுவர அரசியலார் முயற்சிசெய்து வருவதாகவும் கூறியிருக்கிறார்.

தேர்தல் முடிந்த பின்னர் இந்தத் தகவலா?

இரயில்வே கட்டணச் சலுகைகள் குறைக்கப்பட்டுவிடுமாம்!

புதுடில்லி, மார்ச் 25—

"மாணவர்களுக்கும் கலாச்சாரத் தூதுக் குழுக்களுக்கும் தவிர்த்து, மற்றவர்களுக்குத் தரப்படும் இரயில் கட்டணச் சலுகைகள் கூடியவரையில் குறைக்கப்பட்டுவிடும்" என்று மக்கள் சபையில் உதவி இரயில்வே அமைச்சர் ஷா நவாஸ் கான் கூறியுள்ளார்.

படுகொலையின் வேகம்

24 மணி நேரத்தில் 270 பேர் கொல்லப்பட்ட கொடுஞ்செயல்!

அல்ஜீரியர்ஸ், மார்ச் 24—

அல்ஜீரியாவில் சென்ற 24 மணி நேரத்தில் சுமார் 270 சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பிரெஞ்சுப் படையினர் சுட்டுக் கொன்றதாகக் கூறப்படுகிறது.

துருக்கியிலிருந்து பாகிஸ்தான் வரை பாதை அமைப்பு!

துருக்கியிலிருந்து பாகிஸ்தான் வரை போக்குவரத்துக்கான சாலையும், இரயில் பாதையும் அமைப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிய அமெரிக்கத் தலைவரின் விசேடத் தூதுவர் தயாராக இருக்கிறாராம். அவர் தற்போது மத்திய கிழக்கத்திய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கிறாராம்.

இம்மிகப் பெரிய போக்குவரத்துத் திட்டங்களை நிறைவேற்ற ஈரான்—ஈராக் வழியாக அங்காராவிலிருந்து காராச்சிவரை பாதை அமைக்க வேண்டுமென்றும், துருக்கி—ஈரான் இரயில்வேக்களை இணைக்கவேண்டி வருமென்றும் அதிகாரிகள் கூறினராம்.

பாக்தாத் ஒப்பந்தத்தின் இராணுவக் குழுவில் சேருவதாக அமெரிக்கா அறிவித்ததைத் தொடர்ந்து, இந்த இருதிட்டங்களையும்பற்றி அதிகாரிகள் அக்கறை கொள்ள ஆரம்பித்துள்ளனராம்.

வீராப்புப் பேசுபவரின் வேறொரு மார்க்கம்!

பண்டித நேருவின் அச்சம்

“இந்த உலகில் பணம் மிகவும் தொல்லை தரக்கூடியது; பணம் படுத்தும் பாடு சொல்லுந்தரமன்று. பணத்தைவிட மிகவும் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்தது வேறெதுவுமே கிடையாது. எனவே பணத்தின்மீது ஓரளவு வெறுப்பை வளர்ப்பது நல்ல பழக்கமாகும்.

“பணத்தின்மீது தான் வெறுப்புகொள்ள வேண்டும் என்று கூறுகிறேனே தவிர, பணத்தை வைத்திருப்பவரின் மீது அல்ல; தீய காரியங்களுக்குப் பணக்காரர்கள் பணத்தைப் பயன்படுத்தினால்தான் அவர்களை வெறுக்க வேண்டும்,” என்று பண்டித நேரு, புதுடில்லியில் வணிகர்கள், தொழிலதிபர்கள் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரங்கள் அளவுமீறி ஓரிடத்தில் குவிக்கப்படுதல் கூடாது

அது தனி மனித நலன்களுக்கும் சுதந்திரத்திற்கும் விரோதமானது

நிதிக்குழுத் தலைவர் சந்தானம் கருத்து

அரசியல்வாதிகள் பொருளாதார விவகாரங்களையும் பேச வேண்டிய அளவுக்கு இன்று அரசியலும் பொருளாதாரமும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன.

“அதிகாரங்கள் அனைத்தும் அளவுக்கு மீறி ஓரிடத்தில் குவிக்கப்படுவது தனி மனித நலன்களுக்கும் சுதந்திரத்திற்கும் விரோதமானதாகும்.

“எனவே, அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமென நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

“கூட்டுறவுச் சங்கங்களும், பஞ்சாயத்துக்கள், மாவட்டக் கழகங்கள் போன்றவையும் மேலும் மேலும் விரிவாக பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் கூற விரும்புகிறேன்.

“மக்களின் நல்லெண்ணம் இருந்தால்தான், ஜனநாயகமும் சோஷலிசமும் ஒரே நேரத்தில் இயங்கவும் வளரவும் முடியும்.”

என்பதாக நிதிக் கமிஷன் தலைவர் சந்தானம் அவர்கள், மயிலாப்பூர் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய சர். எஸ். வரதாச்சாரியார் குறிப்பிட்டதாவது:—

“அதிகாரங்கள் மேலும் மேலும் பரவலாக்கப்பட வேண்டும் என்ற சந்தானம் அவர்களின் கருத்தை நான் ஆதரிப்பதற்கில்லை.

“அதிகாரங்களை ஓரிடத்தில் குவிப்பதில் தீமைகள் இருக்கத்தான் செய்கின்றன.

“ஆனால் நான் அருகிலிருக்கும் கொடுங்கோலனைவிட, தூர இருக்கும் கொடுங்கோலனையே விரும்புகிறேன்.

“எல்லா அத்தியாவசியமான விவகாரங்களுக்கும், நாம் இப்போது உதவிக்காக மத்திய சர்க்காரை எதிர்பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இதனால் அதிகாரங்களைப் பரவலாக்கிவிடுவதினாலேயே நன்மைகள் ஏற்பட்டுவிடாது.

“தன்னலங் கருதாத கொள்கைகளை மக்கள் பின்பற்றினாலன்றி—ஏற்றுக் கொண்டாலன்றி, சோஷலிசத்திலிருந்தோ ஜனநாயகத்திலிருந்தோ நன்மைகள் பெற முடியாது.”

***

****

தலைநகரில் பாராட்டுக் கூட்டம்

★

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நின்று வெற்றி பெற்றுள்ள அண்ணா அவர்களுக்கும், மற்ற எல்லாத் தோழர்களுக்கும் **31-3-57 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு** திருவல்லிக்கேணி கடற்கரையில் பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. **நெடுஞ்செழியன்** அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

ரூ. 2 லட்சம் செலவில்!

சென்னை சட்டசபையை மாற்றும் பணி வேகமாக நடைபெறுகிறது

சென்னை சட்டசபையை மீண்டும் கோட்டைக்கு (செயின்ட் ஜார்ஜ் போர்ட்) மாற்ற வேண்டுமென்ற ஆட்சியினரின் முடிவை ஒட்டி, கவுன்சில் மண்டபத்தை மீண்டும் புதுப்பிப்பது சம்பந்தமான வேலைகள் முழு வேகத்தில் நடைபெறுகின்றனவாம்.

கோட்டையிலுள்ள சட்டசபை கூடும் பகுதி, திருத்தியமைக்கப்பட்ட பின்பு சுமார் 220 பேர் உட்காருவதற்கு வசதியுள்ளதாக இருக்குமென்று தெரிகிறது.

தற்போது மவுண்ட்ரோடு அரசாங்க மாளிகையின் அருகிலுள்ள சட்டசபைக் கட்டிடம் ரூ. 11 இலட்சம் செலவில் கட்டப்பட்டது நினைவிலிருக்கலாம்.

சட்டசபையையும் அதன் சம்பந்தமான அலுவலகங்களையும் பழையபடி கோட்டைக்கு மாற்றுவதால் சுமார் 2 இலட்சம் செலவாகுமென்று தெரிகிறது.

***

இந்தியாவில் நபர் விகித வருமானம் ரூ. 260; வரி விதிப்பு ரூ. 19!

மக்கள் சபையில் நிதி மந்திரி தகவல்

புதுடில்லி, மார்ச் 25—

1955-56-ம் ஆண்டுக்கு இந்தியாவின் தேசிய வருமானம் பற்றிய மதிப்பீடுகள் இன்னும் கிடைக்கவில்லையென்று மத்திய நிதி மந்திரி மக்கள் சபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

1954-55-ம் ஆண்டுக்கான நபர் விகித வருமானம், நடப்பு விலைவாசிகளின்படி ரூ. 262·1 ஆகிறது என்றும், 1955-56-ம் ஆண்டுக்கு மத்திய சர்க்கார்களிலும், மாநிலங்களிலும் கிடைத்த வரி வசூல்களின் ‘திருத்தப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில், அந்த ஆண்டுக்கு நபர் விகித வரி விதிப்பு ரூ. 19·7 ஆகிறது, என்றும் 1955-56-ம் ஆண்டுக்கு தேசிய வருமான மதிப்பீடுகள் கிடைத்த பின்னரே இவ்வருடத்தின் வருமானத்துக்கும் வரி விதிப்புக்கும் உள்ள விகிதாச்சாரம் பற்றிக் கணக்கிடமுடியும் என்றும், பிரிட்டன், அமெரிக்கா, இரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் விகிதாரத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் இந்தியாவின் வரி விதிப்பு விகிதாச்சாரம் எவ்வாறு உள்ளது என்பது பற்றித் தகவல் இல்லையென்றும் அந்த மந்திரி கூறினாராம்.

ஒரே மாதிரியான வரி விதிப்புக் கொள்கை வேண்டும்

தனியார் முயற்சிகள் பாதிக்கப்படுவதாக ஓலம்

மாநில அரசியலாரின் விற்பனை வரிக் கொள்கைகள் ஒரு நிலையில் இருக்கவேண்டுமென்று வற்புறுத்தி இந்திய வர்த்தக சபை சம்மேளனம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

மேலும் அத்தீர்மானத்தில், ‘மாநில அரசியலாரோடு கலந்தாலோசித்து மத்திய அரசினர் விற்பனை வரி மாதிரிச் சட்டமொன்று தயாரித்து, அதை மாநிலங்கள் நிறைவேற்றுமாறு செய்யவேண்டும்; இதற்கு மத்திய அரசினரோடு, மாநில அரசியலார் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்’ என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தீர்மானங்களை ஆதரித்துப் பேசிய பி. என். தாலூக்தார் என்பார், தேவைப்படும் நிதியை ஐந்தாண்டுக்குள் திரட்டுவதற்காக இந்தியப் பேரரசு மேற்

(4-ம் பக்கம் பார்க்க)

இந்திய விமானப் போக்குவரத்து

சில புள்ளிவிவரங்கள்

இந்தியாவில் விமானப் போக்குவரத்துக்கள் 1953 ஆகஸ்டு மாதத்தில் தேசிய மயமாக்கப்பட்டன.

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதியில் ‘ஏர் இந்தியா இண்டர் நேஷனல்’ நிறுவனத்திற்கு மொத்தம் ஒன்பது விமானங்கள் சொந்தமாக இருந்தன. இவற்றைக் கொண்டு பதினைந்து வெளிநாடுகளுடன் விமானப் போக்குவரத்து நடத்தப்பட்டு வந்தது. போக்குவரத்து நடைபெற்றுவந்த மார்க்கங்களின் மொத்த நீளம் 23,483 மைல்கள்; இதே காலத்தில் ‘இந்தியன் ஏர் லைன்ஸ் கார்ப்பொரேஷன்’ நிறுவனத்திற்குச் சொந்தமாக மொத்தம் 92 விமானங்கள் இருந்தன. இவற்றைக் கொண்டு பிரதான நகரங்களுக்கிடையே போக்குவரத்து நடத்தப்பட்டு வந்தது; உள்நாட்டில் போக்குவரத்து நடைபெற்றுவந்த மார்க்கங்களின் மொத்த நீளம் 19,985 மைல்கள்.

இரண்டாவது திட்டத்தில் இவ்விரண்டு ‘கார்ப்பொரேஷன்’களுக்கும் மொத்தம் ரூ. 30½ கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதல் திட்டத்தில் இவற்றுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 9½ கோடி ஆகும். (ஆனால் இக்காலத்தில் செலவிடப்பட்ட தொகை ரூ. 15 கோடிக்கும் அதிகமாகும்)

முதல் திட்ட காலத்தில் புதிதாக ஒன்பது விமான நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டன, (1956-ம் ஆண்டு இறுதியில் மேலும் ஒரு விமான நிலையம் கட்டி முடிக்கப்பட்டது); 1957-ம் ஆண்டு ஆரம்பத்தில் சிவில் விமானப் போக்குவரத்து இலாகா இயக்கிப் பராமரித்து வந்த விமான நிலையங்களின் மொத்த எண்ணிக்கை இவற்றைச் சேர்த்து 89 ஆக உயர்ந்துள்ளது.

‘சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து’ ஒப்பந்தத்தின் நிர்ணயிக்கப்பட்டுள்ள தரங்களுக்கேற்ப, விமான நிலையங்களில் வசதிகளை ஏற்படுத்துவதற்காக இரண்டாவது திட்ட காலத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் வேலைகளுக்கு மொத்தம் ரூ. 18 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

தோற்றுப் போனது ஏன்?

கம்யூனிஸ்டு விளக்கம்

கோவையிலிருந்து வெளிவரும் பி. எஸ். பி. நாளிதழான ‘சமுதாயம்’ 21-3-57 இதழில் காணப்படுபவை :—

தமிழ் நாட்டில் கம்யூனிஸ்டுக் கட்சி இத்தேர்தலில் பெரும் தோல்வி கண்டிருக்கிறதல்லவா? அதுபற்றி கம்யூனிஸ்டுகள் கலக்கம் தெரிவித்தனர்.

கட்சித் தலைவர் கூறுகிறார்

தேர்தல் முடிவுகளைக் குறித்து கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களில் ஒருவர் கூறியதாவது :—

“தேர்தல் வாய்ப்புகளைப் பற்றிக் கணக்கிடும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்கைக் குறைத்தும், காங்கிரசில் இருந்து பிரிந்து வந்த கோஷ்டியின் செல்வாக்கை மிகைப்படுத்தியும் மதிப்பிட்டு விட்டோம்.

“சட்டசபையில் இருந்த கம்யூனிஸ்டு மெம்பர்கள் தங்கள் தொகுதிகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டு சரியானபடி வேலை செய்வதிலும் தவறி இருக்கிறார்கள்.

“அத்துடன் கம்யூனிஸ்டுக் கட்சி ஏற்கனவே எந்தெந்த வர்க்கங்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந்ததோ அந்த வர்க்கங்களுக்கு அப்பாலும் பகுதிகளுக்கு அப்பாலும் தன் செல்வாக்கை அபிவிருத்தி செய்துகொள்ள முடியாது போயிற்று.”

அவ்வாறு அந்தக் கம்யூனிஸ்டுப் பிரமுகர் கூறினர்.

“தேச விரோத சக்திகளிடம் இருந்து நாட்டைப் பாதுகாப்பதில் கம்யூனிஸ்டுகள்—குறிப்பிடத்தக்க கம்யூனிஸ்டுகள் தேர்தலில் செய்திருக்கிறார்கள்”

என்று கம்யூனிஸ்டுக் கட்சி பத்திரிகை எழுதியிருக்கிறது.

மேலும் சில உண்மைகள்

‘தமிழ் மக்களுக்காகப் போராடக் கூடிய ஸ்தாபனம் தான் தான் என்று தி. மு. கழகம் தமிழ் நாட்டு இளைஞர்கள் பலர் நம்பும்படி செய்திருக்கிறது’ என்று கம்யூனிஸ்ட் வட்டாரங்கள் தெரிவித்தன.

‘தமிழ் நாட்டு அரசியலில் தி. மு. க.வின் வாதம் வலுவடைவது நாட்டு நலனுக்கு ஆபத்து என்பதை கம்யூனிஸ்டுக் கட்சி உணர்ந்திருக்கிறது. அதை எதிர்த்துப் போராடும் வேகத்தில் காங்கிரசை தோற்கடிப்பதற்குக் காட்டிய தீவிரத்தைவிட தி. மு. க.-வை எதிர்ப்பதில் கம்யூனிஸ்டுக் கட்சி அதிக தீவிரம் காட்டிவிட்டது’

என்று கம்யூனிஸ்டு வட்டாரங்கள் தெரிவித்தன.

வேலை தேடுவோரில் நூற்றுக்கு பதினாறு பேருக்கு வேலை கிடைத்தது

புதுடில்லி, மார்ச் 25—

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மொத்தம் 12,32,175 பேருக்கு வேலை தேடித் தரும் நிலையங்களின்மூலம் வேலையளிக்கப்பட்டது என்றும், இவர்களில் முன்னாள் படைவீரர்கள் 80,253 பேர் உட்பட மொத்தம் 1,28,122 பேர் ஆட் குறைப்பு காரணமாக வேலையிழந்தவர்கள் என்றும், இக்காலத்தில் பெயர் பதிவானவர்களில் மொத்தம் 16·7 சதவிகிதம் பேருக்கு வேலை தேடித்தரப்பட்டது என்றும் மத்திய தொழிலாளர் நல மந்திரி மக்கள் சபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினாராம்.

சிற்றுண்டிச் சாலைகளில் ‘நயா பைசா’ அமுல்

சென்னை, மார்ச் 25—

சென்னையிலுள்ள சிற்றுண்டிச் சாலைகளில் விற்பனைச் செய்யப்படும் உணவுப் பண்டங்கள் ‘நயா பைசா’ விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்டு அவை ‘போர்டு’களில் எழுதிவைக்கப்படுமாம்.

***

****

தி. மு. க. சட்டசபை-பாராளுமன்ற உறுப்பினர் தனிக் கூட்டம்

★

திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நின்று வெற்றி பெற்றுள்ள சட்டசபை—பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிக் கூட்டம் ஒன்று 31—3—57 ஞாயிறு காலை 10-மணிக்கு, சென்னை-இராயபுரம் ‘அறிவக’த்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவரும் வருகைதர வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

தமிழகத்தில் புதிய மந்திரி சபை

பெண்கள், சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம்

மேலிட உத்தரவு பற்றி காமராசர்

சென்னை, மார்ச் 26—

தமிழகத்தில் புதிய மந்திரி சபையில் இடம் பெறப்போகிறவர்களின் பெயர்ப்பட்டியல் ஏப்ரல் 10 அல்லது 11-ந்தேதியன்று அறிவிக்கப்படும் என்பதாகக் காமராசர் தெரிவித்திருக்கிறார்.

ஏப்ரல் 2-ந்தேதியன்று கூடி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள், தலைவரைத் தேர்ந்தெடுப்பர் என்ற அறிவிப்பு ஏற்கனவே வெளிவந்ததுதான்.

புதிய மந்திரிசபை ஏப்ரல் 13-ந்தேதியன்று பதவி ஏற்கும் என்று தெரியவருகிறது.

ஒருமுகமாக!

தலைவர் தேர்தல், ஒருமனதாக நடைபெற வேண்டும் என்பது மேலிடத்தின் விருப்பம் என்றும் காமராசர் தெரிவித்திருக்கிறார்.

சேதுபதிக்கு நாமம்!

'காங்கிரஸ் டிக்கெட்டில் நின்று வெற்றி பெற்றவர்கள் மட்டுமே தலைவர் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர் என்பது மேலிடத்தின் உத்திரவு' என்று காமராசர் தெரிவித்திருக்கிறார்.

'சேதுபதி என்ன ஆவார்?' என்று கேட்டபோது, 'மேலிட உத்தரவுதான் தெளிவாயிருக்கிறதே' என்றும் காமராசர் கூறினாராம்.

மேலும் மந்திரிசபையில் சிறுபான்மையினருக்கும், பெண்களுக்கும் பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும் என்பதும் மேலிட உத்தரவாம்.

கோவா பற்றி புதிய நடவடிக்கைகள்

எதிர்க்கட்சியினரையும் கலந்து ஆலோசிப்பதாக நேரு தகவல்

புதுடில்லி, மார்ச் 25—

'வரப்போகும் சில வாரங்களுக்குள், கோவா பற்றி சில புதிய நடவடிக்கைகளை இந்திய சர்க்கார் மேற்கொள்ளும்' என்று, பண்டித நேரு மக்கள்சபையில் தெரிவித்திருக்கிறார்.

'அந்த நடவடிக்கைகள் இப்போதைய சூழ்நிலைகளில் மிகுந்த பலன் தரத்தக்கதாக இருக்கும்' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'நமது அடிப்படைக் கொள்கை, பிரச்சினையை நாம் அணுகிவந்துள்ள பரந்த நோக்கம் இதனால் மாறாது' என்றும், 'ஆனாலும், கோவா பற்றிய நமது கொள்கையின் இதர அம்சங்களைக் கவனமாகப் பரிசீலித்தாக வேண்டும் என்று நான் சில காலமாக உணர்ந்துவருகிறேன்' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'புதிய கொள்கையை வகுப்பதில், நான் எதிர்க்கட்சியினரையும் கலந்து ஆலோசிப்பேன் என்றும் பண்டிதர் கூறியிருக்கிறார்.

சேதுசமுத்திரத்திட்டம்

இரண்டாம் திட்டத்தில் சேர்க்கப்படமாட்டாதாம்

புதுடில்லி, மார்ச் 25—

"சேதுசமுத்திரத் திட்டம் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுமா என்பதை இப்போது கூறுவதற்கில்லை"

என்று மக்கள் சபையில், உதவி மந்திரி அரியலூர் அளகேசன் கூறியிருக்கிறார்.

'சேதுசமுத்திரத் திட்டக் குழுவின் அறிக்கை பற்றி சர்க்கார் இன்னும் எந்தவித முடிவையும் அறிவிக்கவில்லை' என்றும் அவர் கூறினாராம்.

'குழுவினர், திட்டத்திற்கு ரூ. 9,98,00,000 செலவாகும் என்று கூறியிருந்தாலும், அதற்கு ரூ. 5 முதல் 20 கோடிவரை செலவாகும் என்று சர்க்காருக்குத் தகவல் கிடைத்திருத்திருக்கிறது,' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

விலை உயர்வுக்குக் காரணம் கூறவில்லை

ஆனால் சமாதானம் கூறி மழுப்புகிறார் அமைச்சர்

புதுடில்லி, மார்ச் 25—

"பாகிஸ்தானைப் பார்—இந்தியாவைவிட அங்கு விலைவாசிகள் இரட்டிப்பு!

"சீனாவைப் பார் — அங்கும் தானிய விலை இந்தியாவைவிட அதிகமாக இருக்கிறது!

"தற்போது நாட்டில் 19,000 நியாய விலைக் கடைகள் உள்ளன. இந்த ஏற்பாட்டை இந்திய அரசு செய்திராவிட்டால் உணவு தானியங்களின் விலை விஷம்போல் ஏறியிருக்கும்,"

இவ்வாறு, மத்திய உணவுத் துறை துணை அமைச்சர் எம். வி. கிருஷ்ணப்பா, மக்கள் சபையில், 'அரசாங்கம் தீவிரமாக முயன்றும் ஏன் உணவுப் பொருள்களின் விலை குறையவில்லை?' என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், சமாதானம் கூறியுள்ளார்.

உங்கள் குறிப்புக்கு!

இலட்சுமணபுரி, மார்ச் 26—

உத்திரப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 42 மாவட்டங்களின் நிவாரண வேலைக்கு ரூ. 1,05,81,604 அனுமதிக்கப்பட்டிருக்கிறதாம்.

ஒரே மாதிரியான...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளும் முயற்சிகள் தனியார் துறைக்கு பெரிதும் தொல்லையைத் தருமென்றும், முன்னேற்றத்திற்குத் திட்டமிடும் அரசியலார் திட்டவட்டமில்லாத வரிக்கொள்கையைக் கடைப்பிடிக்கிறதென்றும், தாங்களே நியமித்த குழுக்களின் முடிவான சிபாரிசுகளுக்குக் கூட மதிப்பு கொடுப்பதில்லை என்றும் கூறினாராம்.

மேலும் நிறைவேற்றிய தீர்மானங்களில், நாட்டில் 'விஞ்ஞான முறை'யில் ஒரு வரி விதிப்புக் கொள்கையை வகுக்குமாறும், தனியார்களுக்கும், கம்பெனிகளுக்கும் விதிக்கப்படும் வரி அடிக்கடி மாற்றப்படுவதற்கு வருந்தியும், இத்தகைய மாறுதல் தனியார்களின் முயற்சியையும், கூட்டு முயற்சியையும், பெரிதும் குலைக்குமென்றும், கம்பெனிகளின் வரியை உயர்த்தினால் தனியார்களின் வரியை குறைக்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கின்றன.

பாடப் புத்தகங்களை வைத்துக்கொண்டே பரீட்சை

ஆமதாபாத், மார்ச் 24—

"குஜராத் பல்கலைக் கழக மாணவர்கள், தேர்வுகளின்போது தங்களின் பாட நூல்களைத் தேர்வு எழுதும் மண்டபத்திற்கு எடுத்துச்சென்று, பாட நூல்களைப் பார்த்தே வினாக்களுக்கு விடை எழுத இனிமேல் அனுமதியளிக்கலாம்"

என்ற தீர்மானமொன்றை குஜராத் பல்கலைக் கழக செனட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

தேர்வுத்துறை சீர்திருத்தத்தில், புதுமை மாற்றத்தின் முதற்படியான இத் தீர்மானத்தை ஆராயுமாறு, செனட், பல்கலைக் கழக சிண்டிகேட்டை கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தோனேஷியாவில் அரசியல் நெருக்கடி

மந்திரி சபை அமைப்பு சிக்கல் அதிகரிக்கிறது?

போகூர், மார்ச் 25—

இப்போது இந்தோனேஷியாவில் உருவாகியுள்ள அரசியல் நெருக்கடியைத் தீர்த்துவைக்கும் திறமைபெற்ற நிபுணர்களைக் கொண்டு ஒரு புதிய அமைச்சரவையை ஏற்படுத்துவதற்குத் தேசியக் கட்சித் தலைவர் சுவிர்ஜோவுக்கு மேற்கொண்டு ஒரு வாரகாலம் தவணையை சுகர்ணோ தந்துள்ளாராம்.

எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் ஒருநிலையான அமைச்சரவையை அமைப்பதே சுகர்ணோவின் இலட்சியம்; இதற்கு, அங்குள்ள இரு முஸ்லிம் கட்சி ஒத்துக் கொள்ளவில்லை.

இந்தோனேஷியாவில் நீண்டகாலமாக அரசியல் நெருக்கடியும் அமைதிக்குறைவும் ஏற்பட்டதால் டாக்டர் அலிசஸ்த்ரோமித் ஜோஜோவைப் பிரதமராகத் தேசியக் கட்சி அமைச்சரவை பதவியிலிருந்து விலகியது.

இந்தத் தேசியக் கட்சியே நாட்டில் பெரிய கட்சியாக இருப்பதால், அக்கட்சியைச் சேர்ந்த மற்றொரு பிரமுகரான சுவிர்ஜோவை அமைச்சரவை அமைக்குமாறு 15-நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி சுகர்ணோ கேட்டுக்கொண்டது நினைவிலிருக்கலாம்.

1,608 பேர்கள்மீது வழக்குகளாம்!

707 பேர் குற்றவாளிகளாம்!

புதுடில்லி, மார்ச் 26—

கேரள உயர் நீதிமன்றத்தின் பெஞ்ச் கோர்ட் ஒன்றை திருவனந்தபுரத்தில் நிறுவவேண்டுமென ஆர்ப்பாட்டம் நடத்தியது குறித்து 1,608 பேர்மீது வழக்கு தொடரப்பட்டதாக மக்கள் சபையில் மத்திய அமைச்சர் தத்தார் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியுள்ளார்.

இதில் 707 பேர் குற்றவாளிகள் என்றும், 125 பேர் மீதுள்ள வழக்குகள் வாபஸ் பெறப்பட்டதென்றும் அவர் தெரிவித்தார்.

ஐந்தாண்டுத்திட்டத்தின் எதிர்காலம்!

ஆட்சியின் நிலைபற்றி விளக்கம்

புதுடில்லி, மார்ச் 25—

'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை மெதுவாக நடத்தும் உத்தேசம் இந்திய அரசாங்கத்திற்கோ நிதிக் குழுவிற்கோ கிடையாது' என்று, திட்ட அமைச்சர் நந்தா மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

ஓட்டலை மூடிவிட்டு ஊட்டியில் உல்லாச வாசமா?

உடுப்பி முதலாளியின் போக்கு--- தொழிலாளர்கள் குமுறல்

சென்னை மவுண்ட் ரோடிலுள்ள உடுப்பி ஓட்டலை 18-3-57-ல் மூடிய அதன் முதலாளி பெங்களூர்—மதராஸ் உட்லண்ட்ஸ் என்ற புது ஓட்டலை திறந்து கவலையற்றிருக்கிறார். சென்னை நகர ஓட்டல் தொழிலாளர் சங்கத்திலிருந்து 20-3-57-ல் தந்திமூலம் செய்தியறிவித்தும் யாதொரு பதிலும் தெரிவிக்கவில்லை. தொழில் அதிகாரி முன்னிலையில் ஆஜரான அதன் மானேஜர் கிராஜுடி கோரிக்கைகளுக்கு இணங்கவில்லையென்பதோடு, மீண்டும் இத்தொழிலாளர்களை வைத்துக்கொண்டு ஓட்டலைத் துவங்கவும் மறுக்கிறார். பண்டித நேருவுக்கும் ஜனாதிபதிக்கும் இது குறித்து தந்திமூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் ஓட்டலுக்குள்ளேயே இருந்துவருகின்றார்கள் என்று தெரிய வருகிறது.

கேரளமாநிலத்தின் இரு சிக்கலான பிரச்னைகள்

கம்யூனிஸ்டு கட்சியின் முடிவான கருத்து என்ன?

எர்ணாகுளம், மார்ச் 26—

"கேரளத்தின் தலைநகரை திருவனந்தபுரத்திலிருந்து மாற்றுவதும், திருவனந்தபுரத்தில் உயர் நீதிமன்றத்தில் பெஞ்சு ஒன்றை நிறுவுவதும் சிக்கலான பிரச்சினைகள்; எனவே, சம்பந்தப்பட்ட எல்லா மக்களையும் திருப்தி செய்யும்வகையில் இப்பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும்" என்று கேரள சட்டசபையின் கம்யூனிஸ்டுக் கட்சி தலைவர் திரு. இ. எம். எஸ். நம்பூத்ரிபாட் கூறியுள்ளார்.

மேலும் அவர், இப்பிரச்சினைகளைப் பற்றி கம்யூனிஸ்டுக் கட்சி எவ்வித முடிவான கருத்துக்களையும் கொண்டிருக்கவில்லையென்றும் கூறியிருக்கிறார்.

'கம்யூனிஸ்டுகளுடன் கூட்டு சேர இயலாது'

பி. சோ. தலைவர் அறிவிப்பு

இலட்சுமணபுரி, மார்ச் 25—

'கேரள மாநிலத்தில் கம்யூனிஸ்டுகளுடன் கூட்டு சேர்ந்து அமைச்சரவை அமைப்பது இயலாத காரியம்' என்று பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளர் திரிலோக் சிங் தெரிவித்துவிட்டார்.

மேலும் அவர், 'கம்யூனிஸ்டுகளுடன் கூட்டு சேருவதென்ற பேச்சுக்கே இடமில்லை' என்றும் உறுதியாக வெளிப்படுத்தியுள்ளார்.

பிரிட்டனின் பிடிவாதம்

ஜப்பான் எதிர்ப்பை நிராகரித்துவிட்டது

லண்டன், மார்ச் 26—

பசிபிக் மகாசமுத்திரத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் நடத்தத் திட்டமிட்டிருக்கும் அணுகுண்டு பரிசோதனை சம்பந்தமாக ஜப்பான் சர்க்காரின் எதிர்ப்பை பிரிட்டன் நிராகரித்து விட்டதாகத் தெரிகிறது. ஆனால் அப்பரிசோதனையை மிக எச்சரிக்கையாக நடத்துவதாகவும் அதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு ஈடு தருவதாகவும் குறிப்பிட்டுள்ளனராம்.

அபாயகரமான பகுதிகளில் நுழையக்கூடாது எனத் தெரிந்திருந்தும் மீறி நுழைந்து அபாயத்திற்கு உட்பட்டால் அதற்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் பொறுப்பாளியல்ல என்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஊழியர் நல நிதி பற்றி புதிய சிபாரிசுகள்

'ஊழியர் நல நிதியில் (பிராவிடண்ட் நிதி) சேர்ந்துள்ள உறுப்பினர்கள் சேர்த்துவைக்கும் பணத்திற்கு ஆண்டுக்கு 3½ சதவீதமாக வட்டியை உயர்த்த வேண்டும்,' என்று இங்கு கூடிய நிதியின் மத்திய டிரஸ்டிகள் போர்டு, அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்துள்ளது. 1957—58-ம் ஆண்டு முதல் அதிக வட்டி அமுலுக்கு வரவேண்டுமென்பது அவர்களின் முக்கிய சிபாரிசு.

நிதியில் முதலாளிகள் செலுத்தவேண்டிய தொகையை வசூலிப்பதிலுள்ள கஷ்டங்கள் பற்றி ஆராய்ந்து, தவறிழைக்கும் முதலாளிகளுக்குக் கடுமையான தண்டனை விதிப்பது பற்றியும் அரசாங்கம் யோசனை செய்ய வேண்டும் என்றும் போர்டு கூறியுள்ளது.

மறைவு

சென்னை, மார்ச் 27—

'நம் நாடு' அலுவலகத்தில் அச்சகப் பிரிவில் பணியாற்றும், தோழர் தக்கோலம்-நரசிம்மன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் உடல் நலங்குன்றி மருத்துவ விடுதியில் அனுமதிக்கப்பட்டு, 26—3—57 இரவு உயிர்நீத்தார் என்ற செய்திகேட்டு 'நம் நாடு' அலுவலகத் தோழர்கள் வருந்துவதுடன் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றனர். (ஆ.-ர்.)

ஜெர்மனியிலும், இத்தாலியிலும் அமெரிக்கப் படைகள் இருக்கும் வரையில் அங்கேரியிலும், போலந்திலும் ரஷ்யப் படைகள் இருந்தே தீரும் என்று அங்கேரி கட்சித் தலைவர் கியார்கி மாரோசான் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ., எம்.பி.-க்களுக்குப் பாராட்டு

திருவல்லிக்கேணி கடற்கரையில்

31-3-57 ஞாயிறு மாலை 6-மணிக்கு

★

போதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமையில் நடைபெறும்.

★

அண்ணா

அவர்களும், பிறரும் கலந்துகொள்வர்.

பலர் பாராட்டுரை வழங்குவர்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.